DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE KANYAKUMARI
AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No.312/2023
Prosecution Witness -P.W. 8

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுதன் |
| Father's Name | : | ஏசுதாசன் |
| Village | : | ஆரல்வாய்மொழி |
| Taluk | : | தோவாளை |
| Caste | : | கிறிஸ்தவ முக்குவர் |
| Calling | : | டிரைவர் |
| Religion | : | கிறிஸ்தவம் |
| Age | : | 26 |
| Date | : | 15.10.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2024.

(2 மற்றும் 4 ஆம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர்ப்படுத்தப்பட்டார். 1 ஆம் எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

15.10.2024

**முதல் விசாரணை:-**

நான் ஆரல்வாய்மொழி கிறிஸ்து நகரில் மேற்கில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஏசுதாஸ் எனது அப்பா. எனது அப்பா செங்கல் சூளை நடத்தி வந்தார். அ.சா. 1 ஜெயா எனது அம்மா. எனது அப்பாவிற்கும், எனது வீட்டின்

பக்கத்தில் இருந்த அனுசியாவுக்கும் கள்ளத் தொடர்பு இருந்தது. அனுசியா முதல் எதிரி அன்பு என்கிற அன்பழகனின் அண்ணன் தங்கராஜின் மனைவி ஆவார். அன்பழகனும், விஜயனும் அது காரணமாக அடிக்கடி எனது அப்பாவுடன் சண்டைக்கு போய் கொண்டே இருப்பார்கள். 05.05.2023 அன்று இரவு 8.00 மணிக்கு எனது தங்கைக்கு உடல்நிலை சாியில்லாததால் எனது அப்பா மாத்திரை வாங்குவதற்காக அப்போல்லோ மெடிக்கல் கடைக்கு சென்றார். அப்போது அங்கு இருந்த அன்புவும், மணிகண்டனும் எனது அப்பாவை கெட்ட வார்த்தை பேசி பாட்டிலால் தலையில் அடித்து காயப்படுத்திவிட்டார்கள். ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் இது குறித்து வழக்கு பதிவு செய்தார்கள். 09.06.2023 அன்று இரவு 8.25 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எனது சொந்தக்காரர் சண்முகநாதன் என்னுடைய மொபைல் போனுக்கு பேசினார். எனது அப்பாவை அன்பழகன், விஜயன், மணிகண்டன், தங்க ஜோஸ் ஆகிய 4 பேரும் வழி மறித்து கத்தியால் குத்தியதாகவும், ஆரல்வாய்மொழியில் உள்ள கனி மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதாகவும் சொன்னார். நான் உடனே கனி மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு அப்பா இல்லை. அப்பாவை மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் பைக்கில் மனுவேல் மருத்துவமனைக்கு சென்றேன். அப்பாவை பாா்த்தேன். உடலில் காயம் பட்டிருந்தது. வலது நடு நெஞ்சு, இடது பக்க வயிறு, அடிவயிறு, ஆணுறுப்பு மேல் பக்கம் ஆகியவற்றில் கத்திக் குத்து காயம் இருந்தது. இரவு 9.00 மணி போல அப்பா இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். பின்னர் அங்கிருந்து அப்பாவின் பிரேதத்தை ஆசாாிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து

சென்றார்கள். பிணவறை பக்கம் எடுத்து சென்றார்கள். இரவு 10.30 மணி போல ஆரல்வாய்மொழி காவல் உதவி ஆய்வாளர் வந்தார். அம்மாவிடம் புகாா ்மனு கேட்டார். அம்மாவிற்கு எழுத படிக்க தொியாது. நான் அழுது கொண்டிருந்ததால் என்னால் எழுத முடியவில்லை. என்னுடைய நண்பர் விஜய்யிடம் சொல்லி அம்மா சொல்ல சொல்ல விஜய் புகாரை எழுதினார். நான் படித்து காட்டி அம்மா சரியாக இருப்பதாக சொன்னவுடன் அம்மாவின் கையொப்பம் வாங்கி உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது. நான் அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1 ஆவணத்தில் எனது அம்மா கையொப்பம் செய்தார். அதன் அருகே இடது பக்கத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விஜய் அங்கே தகவல் தொிந்து வந்தார். மறுநாள் 10.06.2023 அன்று அதிகாலை 1.30 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். அந்த இடத்தை பார்த்தார். அங்கு வைத்து என்னை விசாரித்தார். அன்றைய தினம் 10.00, 11.00 மணியளவில் அரசு மருத்துவகல்லூாி பிணவறையில் வைத்து ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார். அங்கே வைத்து என்னை விசாரித்தார். தற்போது சாட்சி சம்பவ இடத்தில் என்னை விசாரிக்கவில்லை என்றும், பிணவறையில் வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் கூறுகிறார்.

**குறுக்கு விசாரணை (2 ஆம் எதிரி தரப்பில்) :-**

நான் எத்தனை வருடமாக டிரைவர் வேலை பார்க்கிறேன் என்றால் 8, 9

ஆண்டுகளாக பார்த்து வருகிறேன். எனக்கு சொந்தமாக டிம்போ உள்ளதா என்றால் உள்ளது. நான் சுரேஷ் டால்டன் என்பவரின் டிம்போவில் டிரைவராக இருந்தேனா என்றால் இருந்தேன். நான் சொந்தமாக எந்த வருடத்திலிருந்து டிம்போ வைத்துள்ளேன் என்றால் என்னிடம் சொந்தமாக டிம்போ கிடையாது, எனது அப்பா வைத்திருந்தார், 2016 ஆம் ஆண்டிலிருந்து சொந்தமாக வைத்திருந்தார். 2016 லிருந்து அந்த டிம்போ தான் ஓட்டி வந்தேனா என்றால் அந்த வண்டியும் ஓட்டுவேன், வேறு வண்டியும் ஓட்டுவேன். என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கும் போது நான் சொந்தமாக டிம்போ வைத்து 2016 லிருந்து ஓட்டி வருவதாக சொன்னேனா என்றால் இல்லை. ஆரல்வாய்மொழி சுடுகாட்டு பக்கம் எனது அப்பா எப்போதிலிருந்து செங்கல் சூளை நடத்தி வந்தார் என்றால் நான் பிறந்த 1998 ஆம் ஆண்டிலிருந்து அதை நடத்தி வந்தார். ஆரல்வாய்மொழி சுற்று வட்டாரங்களில் சுமார் 300 செங்கல் சூளைகள் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா ஆரம்பித்த செங்கல் சூளையை அவர்தான் நடத்தி வந்தாரா என்றால் இல்லை, அனுசியாவுடன் தொடர்பில் இருந்தபோது அவர் செங்கல் சூளையை நடத்தவில்லை. அப்போது அவர்கள் தூத்துக்குடியில் இருந்தார்கள். அனுசியாவுடன் எனது அப்பா தொடா்பில் இருந்ததாக நேரடியாக தொியாது என்றால் சரியல்ல எனக்கு தொியும். அனுசியாவுடன் தொடர்பில் இருந்ததாக போலீசார் சொல்லி கொடுத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செங்கல் சூளை தொழிலில் வியாபாரம் செய்வதில் தொழில் போட்டிகள் உண்டு என்றால் இல்லை. எனது மனைவி பெயர் முனிஷா. எனது மனைவி ஆரல்வாய்மொழி பெருமாள்புரத்தை சாா்ந்தவர் என்றால்

சரிதான். அவர்கள் நாடார் வகுப்பை சாா்ந்தவரா என்றால் ஆமாம். எனது மனைவியை நான் காதலித்து அழைத்து சென்றுதான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். நான் பரவர் (முக்குவர்) இனத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். எனது மனைவியை அழைத்து சென்று எனது அப்பாவின் உதவியுடன் திருமணம் செய்து கொண்ட போது அந்த ஊாில் ஜாதி கலவரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பெண்ணை நான் அவ்வாறு அழைத்து சென்று திருமணம் செய்ததினால் எங்கள் ஊாில் ஜாதிக் கலவரம் ஏற்பட்டு, அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கபட்டு சமரசம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு நாட்டு விளையாட்டு கலைகள் தொிந்த ஒரு ஆசான் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. எனது அப்பாவிற்கு நாட்டு விளையாட்டு கலைகள் தொியும் அவா் கத்தி சண்டை, வாள் சண்டை, சுருட்டு வாள் சண்டை, கம்பு சண்டை ஆகியவை தொியும் என்றாலும் அவற்றை பிற நபா்களுக்கு சொல்லி தருவதையும் வழக்கமாக வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா நடத்தி வந்த சூளையில் உள்ள கிரவுண்ட்ல் வைத்துதான் இந்த கலைகள் அனைத்தும் சொல்லி தந்தார் என்றால் சரியல்ல. இந்த கலைகள் முடித்தவருக்கு இறுதியாக போட்டிகளும் அந்த இடத்தில் வைத்துதான் நடைபெறும் என்றால் சரியல்ல. அந்த போட்டிகள் நடைபெறும்போது ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக பல விளையாட்டு வீரர்களுடன் எனது அப்பாவிற்கு பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு முதலில் புளோரா என்ற பெண்ணுடன் திருமணம் நடந்திருந்தது என்றால் சரிதான். அது குறித்து எனக்கு ஒரு 4 வருடங்களுக்கு முன்னர்தான் தொியும். அவர்களுக்கு

பிறந்திருந்த பிரபாகரன் என்ற ஒரு மகன் தற்போதும் இருக்கிறார் என்றால் சரிதான். அந்த பிரபாகரன் எனது அப்பா வீட்டிற்கு வந்து பலமுறை தகராறு செய்து பிரச்சினை உண்டு என்றால் சரியல்ல. அந்த பிரச்சினையை அந்த ஊாில் உள்ள பொியவர்கள் சமாதானம் பேசி அனுப்பி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த பிரபாகரனுக்கும், என்னுடைய அப்பாவிற்கும் முன் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. எங்கள் ஊாில் கால காலமாகவே ஜாதிக் கலவரங்கள் நடந்து வருகிறது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. எனக்கு தொியும் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சுரேஷ் டால்டன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரியல்ல. அவரிடம் வேலைக்கு சென்றுள்ளேன். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தோவாளையை சேர்ந்த ஷாலு என்கிற ஷாலினியை எனக்கு தொியுமா என்றால் தொியாது. அந்த ஷாலினியை அவருடைய கணவர் கொன்றுவிட்டதாக உள்ள வழக்கில் நான் சாட்சியாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என் மீது சந்தேகபட்டு ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் மூன்று நாட்கள் என்னை பிடித்து வைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 05.05.2023 அன்று நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தொியாது என்றால் சரிதான். 09.06.2023 ஆம் தேதி 8.25 மணிக்கு முன்பாகவோ, பின்பாகவோ எத்தனை முறை சண்முகநாதன் என்னிடம் செல்போனில் பேசினார் என்றால் 8.25 மணிக்கு முன்பாக ஒரு முறைதான் பேசினார். 8.25 மணிக்கு பின்பாக இரண்டு, மூன்று முறை பேசியுள்ளார். என்னை

புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கும்போது எனது செல்போனை கைப்பற்றி விசாரித்தாரா என்றால் வாங்கியது போல எனக்கு ஞாபகம் இல்லை. நான் கனி மருத்துவமனைக்கு சென்றபோது கனி மருத்துவமனையிலிருந்து மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனக்கு யார் சொன்னார்கள் என்றால் சண்முகநாதன் என்னிடம் போனில் சொல்லும்போது கனி மருத்துமனையிலிருந்து மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல போவதாக சொன்னார், நான் கனி மருத்துவமனைக்கு நேராக சென்றேன், அங்கு இல்லாததால் மனுவேல் மருத்துவமனைக்கு சென்றேன். நான் முதல் விசாரணையில் கனி மருத்துவமனையில் வைத்து அங்கு உள்ளவர்கள் எனது அப்பாவை மனுவேல் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாக சொன்னார்கள் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது கேள்வி புாியாமல் அவ்வாறு சொன்னேன். நான் முதல் முதலில் எனது அப்பாவை எங்கு வைத்து எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் மனுவேல் மருத்துவமனையில் வைத்து இரவு 8.55 மணிக்கு பார்த்தேன். அப்போது அவர் உயிருடன்தான் இருந்தாரா என்றால் அது எனக்கு தொியாது. நான் பார்க்கின்றபோது மனு வேல் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் அவரை டாக்டர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள், சிகிச்சை அளித்தார்களா என்று எனக்கு தொியாது. எனது அப்பா மனுவேல் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிாிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு கொண்டிருந்தது என்றாலும் நான் அவரை அங்கே வைத்து பார்க்க வில்லை என்றாலும் சரியல்ல. நான் அங்கே தான் பார்த்தேன். நான் பார்க்காததால்தான் எனது

அப்பாவிற்கு நடு நெஞ்சில் குத்துக் காயம் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 9.30 யிலிருந்து 9.45 மணிக்குள் போனேன். என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கும்போது எனது அம்மா சொல்ல சொல்ல புகார் மனு நான் எழுதினேன் என சொன்னேனா என்றால் இல்லை. அம்மா சொல்ல சொல்ல விஜய் எழுதி நான் படித்துக் காண்பித்தேன் என சொன்னேன். புலன் விசாரணை அதிகாாி என்னை விசாாிக்கும்போது எனது அம்மா சொல்ல சொல்ல நான்தான் எழுதினேன் என சொல்லிவிட்டு தற்போது போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 10 வகுப்பு முடித்து விட்டு வெல்டிங் படித்துள்ளேன். அ.சா. 1 புகாாில் எனக்கு இந்த மனுவை எழுத படிக்க தொியாததால் நான் நடந்த சம்பவத்தை சொல்ல சொல்ல எனது மகன் சுதன் எழுதி படிக்க கேட்டு நான் சொன்னபடி சரியாக உள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது அம்மா சொல்ல சொல்ல எனது நண்பர் விஜய்தான் எழுதினார். இந்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள இந்த புகாருக்கும் ஆஜர் எதிாிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் இந்த புகார் எதிாிகள் மீது பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. விஜய்யின் உண்மையான பெயர் தங்கவிஜய். தங்கவிஜய்யை நான் அழைத்துதான் அவர் வந்தாரா அல்லது காவல் துறை அழைத்து வந்தார்களா என்றால் என்னுடைய நண்பர் அப்பா இறந்து விட்டதால் அங்கு வந்தார். இந்த வழக்கில் கணபதி என்ற சாட்சி சண்முகநாதனின் சித்தப்பா மகன் என்றால் சரிதான். மதன் என்ற சாட்சி எனது அப்பாவின் தம்பி மகன்

என்றால் சரிதான். 09.06.2023 ஆம் தேதியில் என் மீது ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அன்று மாலை 6.30 மணிக்கு நான் ஆரல்வாய்மொழி காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. அன்றைய தினம் அங்கு உதவி ஆய்வாளராக இருந்த கீதாவும், சிறப்பு உதவி ஆய்வாளர் பிரான்சிஸ்ம் என்மீது மணிகண்டன் என்பவரால் கொடுக்கப்பட்ட புகாரை விசாரித்து எச்சாித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த பிறகு நான் முதன் முதலில் எத்தனை மணிக்கு ஆரல்வாய்மொழி காவல் நிலையம் சென்றேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தாரா, உதவி ஆய்வாளர் விசாரத்தாரா என்றால் முதல் நாள் உதவி ஆய்வாளர் விசாரித்தார். 10.06.2023 அன்று ஆய்வாளர் விசாாித்தார். ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது நான் சொன்ன விவரங்களை குறித்துக் கொண்டாரா என்றால் குறித்துக் கொண்டார். அப்படி குறித்துக் கொண்டதில் என்னிடம் கையொப்பம் பெற்றாரா என்றால் அவ்வாறு வாங்கியதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஆசாரிபள்ளம் மருத்துவகல்லூாி மருத்துவமனை பிணவறை அருகே என்னை விசாாித்தபோது எனது அப்பாவின் உடலை பார்க்கவில்லையா என்றால் பாா்த்தேன். நான் தான் உடலை அடையாளம் காட்டினேன். அவ்வாறு ஆய்வாளர் விசாரிக்கும்போது நான்தான் எனது அப்பாவின் உடலை அடையாளம் காட்டினேன் என சொன்னேனா என்றால் நாங்கள் இருந்தோம் எல்லோரும் பார்த்தோம். எனது அப்பாவின் உடலை அடையாளம் காட்டும்போது என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஞாபகம் இல்லை. அன்றைய தேதிக்கு பிறகு நான் ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு எப்போது

சென்றேன் என்றால் அதன்பிறகு நான் செல்லவில்லை. எனது அப்பா இறந்த இடத்திற்கு அன்றைய தினம் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 10.06.2023 அன்று அதிகாலை 1.30 மணிக்கு ஆய்வாளர் வரும்போது சென்றேன். நான் அன்றைய தினம், சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் தற்போது போலீசா் சொல்லி கொடுத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நானும், தங்கவிஜய் என்ற விஜய் ம், எனது அம்மாவும், ஆரல்வாய்மொழி போலீசும் சேர்ந்து பொய்யாக ஒரு கதையை உருவாக்கி ஜோடிக்கப்பட்ட வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிா ிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் ஆர்வமுள்ள சாட்சி என்றாலும் போலீசார் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 ஆம் எதிா ி மற்றும் 4 ஆம் எதிா ி தரப்பில் மேலே செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை (3 ஆம் எதிரி தரப்பில்) :-</u>

3 ஆம் எதிா ி மணிகண்டனுக்கும், எனது அப்பாவிற்கோ, எனது குடும்பத்தினருக்கோ இடையே எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரியல்ல இருந்தது. அவ்வாறு எந்த முன்விரோதமும் கிடையாது என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிா ியும்,

மற்ற எதிாிகளும் வெவ்வேறு ஜாதியை சார்ந்தவர்கள் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. 3 ஆம் எதிாியின் அப்பா பெயா் என்ன அவா் எந்த ஊரை சாா்ந்தவர் என்ற விவரங்கள் தொியாது என்றால் அப்பா பெயா் தொியாது முதிலில் திருப்பதிசாரத்திலிருந்து தற்போது செண்பகராமன்புதூாில் இருக்கிறார். ஈபியில் வேலை பார்க்கிறார். போலீசார் விசாரிக்கும்போது அவர் செண்பகராமன்புதூாில் இருப்பதாகவோ ஈபியில் வேலை பார்ப்பதாகவோ சொன்னேனா என்றால் இல்லை. 3 ஆம் எதிாிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.